# AP TRB 2025

Question Booklet Series

**A**

Question Booklet Serial No.

வினாத் தொகுப்பிலுள்ள பக்கங்களின் எண்ணிக்கை :
No. of pages in Question Booklet :

1. தேர்வு எண் (தேர்வு அனுமதி சீட்டில் உள்ளவாறு)
   Roll No. (As in Hall ticket)
2. பாடம்
   Subject
3. OMR விடைத்தாள் எண் (விண்ணப்பதாரரே நிரப்ப வேண்டும்)
   OMR Answer Sheet No. (To be filled in by the candidate)
4. விண்ணப்பதாரரின் பெயர் (விண்ணப்ப படிவத்தில் நிரப்பியுள்ளபடி)
   Candidate's Name (As given in Application form)
5. விண்ணப்பதாரரின் கையொப்பம் (விண்ணப்ப படிவத்தில் நிரப்பியுள்ளபடி
   Candidate's Signature (As given in Application form)
6. கண்காணிப்பாளரின் கையொப்பம்
   Invigilator's Signature

இந்த வினாத்தாளில் 130 கொள்குறிவகை வினாக்கள் உள்ளன. இந்த வினாத் தொகுப்பானது இரு பகுதிகளை கொண்டது. **பகுதி-"அ"**-வில் 30 வினாக்கள் உள்ளன. வினா எண் 1 முதல் 20 வரை இரண்டு மதிப்பெண் வினாக்களும், 21 முதல் 30 வரை ஒரு மதிப்பெண் வினாக்களும் கொண்டுள்ளது. **பகுதி -"ஆ"** 100 ஒவ்வொரு கேள்விக்கும் 1.5 மதிப்பெண்கள் வழங்கப்படும். விண்ணப்பதாரர் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும் தவறான விடைகளுக்கு மதிப்பெண் குறைக்கப்பட மாட்டாது.

This booklet contains 130 multiple choice questions. This Question Booklet is made up of 2 Parts. Part "A" contains 30 questions (Q. No. 1 to 30). Q. No. 1 to 20 is of 2 marks each. Question No. 21 to 30 is of 1 mark each. Part "B" contains 100 questions (Q. No. 31 to 130). Each question is of 1.5 mark each. **There is no negative marking for wrong answer.**

அரசாணை எண் (Ms) எண் 49, மனித வளம் (M) துறை நாள் 23.05.2022 ன்படி மாற்று திறனாளிகள் கட்டாய தமிழ் தேர்விலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர்.

As per GO (Ms) No. 49, Human Resources (M) Department, dated 23.05.2022 differently abled candidates are exempted from the Compulsory Tamil Language eligibility test.

(பக்கம் எண் 2, 3ல் தரப்பட்டுள்ள தமிழ் மற்றும் ஆங்கில வழி குறிப்புகளை படிக்கவும்)

Professor Academy

# குறிப்புகள் / INSTRUCTIONS

**( கவனமாக படித்து அதன்படி நடக்கவும் / READ CAREFULLY AND COMPLY)**

## முக்கிய குறிப்புகள் / IMPORTANT INSTRUCTIONS

**OMR விடைத்தாளில், வினாத் தொகுப்பு வரிசையை அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் விண்ணப்பதாரரே சரியாக நிரப்ப வேண்டும்.**
**Candidate alone should fill the Question Booklet Series correctly at the prescribed place in the OMR Answer Sheet.**

1. விண்ணப்பதாரர் தனக்கு அளிக்கப்பட்ட வினாத்தொகுப்பானது தனது பாடத்திற்குரியதா என்பதை சரிபார்த்துக் கொள்ளவும் மாறி இருந்தால் உடனடியாக அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும்.
   Candidates should verify the subject of the question paper given to him/her. If the subject is changed inform the Hall Superintendent immediately.
2. குறிப்புகளை முழுவதுமாக படித்துவிட்டு OMR விடைத்தாளில் வரிசை எண் 1-லிருந்து **16** மற்றும் வினாத்தொகுப்பில் வரிசை எண் 1-லிருந்து **16** வரையிலான தகவல்களை கவனமாக நிரப்பவும், நீங்கள் குறிப்புகளில் கூறியுள்ளபடி சரியான முறையில் தகவல்களை நிரப்பி கையொப்பம் இடாவிடில், உங்களது விடைத்தாளை மதிப்பீடு செய்யும் போது ஏற்படும் விளைவுகளுக்கு நீங்களே பொறுப்பாவீர்கள்.
   Read Instructions completely and carefully and fill in the details from Sl. No 1 to **16** in the OMR Answer Sheet and Sl. No. 1 to **16** in the Question Booklet. If you fail to fill in the details and sign as instructed correctly, you will be personally responsible for the consequences arising during scanning of your OMR Answer Sheet
3. தவறாக பூர்த்தி செய்யப்படும்/செய்யப்படாமல் உள்ள OMR விடைத்தாட்கள் மதிப்பீட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.
   OMR Answer Sheets will not be evaluated if the OMR Answer Sheet is filled in wrongly/unfilled
4. வினாத்தொகுப்பில் OMR விடைத்தாளின் எண்ணை அதற்கேன தரப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும்.
   OMR Answer Sheet No. should be written in the space provided in the Question Booklet.
5. இந்த வினாத்தொகுப்பானது **130** வினாக்களை 14 பக்கங்களில் கொண்டுள்ளது. வினாத் தொகுப்பினை திறக்குமாறு அறிவுறுத்தப்பட்ட பின்னரே விண்ணப்பதாரர்கள் வினாத்தொகுப்பின் சீலிடப்பட்ட முத்திரைகளை திறக்க வேண்டும் வினாத் தொகுப்பின் பக்கம் 4 லிருந்து 14 வரை **130** வினாக்கள் இடம் பெற்றுள்ளனவா என பார்க்கவும்.
   The Question Booklet comprises of 14 pages having **130** questions. After being instructed to open the Booklet, then only the candidates should open the Question Booklet seals. Check whether the Booklet contains **130** Questions starting from page No. **4** to 14.
6. அனைத்து வினாக்களும் பல்விடை வகை வினாக்கள் ஒவ்வொரு வினாவிற்கும் ஒரே ஒரு சரியான விடை மட்டுமே உள்ளது **தவறான விடைகளுக்கு மதிப்பெண்கள் குறைக்கப்பட மாட்டாது.**
   All questions are of MCQ (Multiple choice question) type. There is only one correct answer to each question. **There will be no negative marking for wrong answers.**
7. அனைத்து கேள்விகளும் தமிழில் உள்ளன."

   All questions are in Tamil .
8. வினா (க்கள்) இல் தவறுகள் இருப்பின், தேர்வின் போது இந்த வினா (க்கள்) சரி செய்யப்படமாட்டாது.
   In event of any mistake in any question/s, no corrections will be made in the Question/s during the examination.
9. வினாத்தொகுப்பின் இறுதியில், செய்து பார்ப்பதற்கென தனியாக தரப்பட்டுள்ள இடத்திலேயே ROUGH WORK செய்து பார்க்க வேண்டும். இதை வினாத்தொகுப்பிலிருந்து கிழிக்கக்கூடாது. கூடுதல் தாள்கள் எதுவும் வழங்கப்படமாட்டாது.
   Rough work, it any, may be done in the Question Booklet only in the space provided at the end of the Booklet. Do not tear it off from the Question Booklet. No additional paper shall be provided.

Professor Academy

10. தேர்வு அறையில் மடக்கை அட்டவணை கால்குலேட்டர் அளவுகோல் மொபைல் தொலைபேசி, பேஜர், டிஜிட்டல் நாட்குறிப்பேடு மற்றும் எந்தவொரு மின்னணு சாதனங்களையும் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது இவற்றை பயன்படுத்தினால் தகுதி நீக்கம் செய்யப்படுவீர்கள். Use of Log tables, Calculators, Slide rules, Mobile Phone, Pager, Digital Diary or any other electronic item/ instrument etc. in the examination hall is not allowed. Their use will result in disqualification.
11. இந்த மாதிரி வினாத்தாள் Professor Academy -ஆல் தொகுக்கப்பட்டது
    This Model Question Paper Prepared by Professor Academy.
12. வினாத்தொகுப்பானது விண்ணப்பதாரர்களுக்கு 1.50 பி.ப. க்கு வழங்கப்படும். விண்ணப்பதாரர்கள் வினாத் தொகுப்பு மற்றும் OMR விடைத்தாளில் நிரப்ப வேண்டிய விவரங்களை சரியாக நிரப்ப வேண்டும். 2.00 பி.ப மணிக்கு நீண்ட மணி ஒலிக்கும். அதன் பிறகே சீலிடப்பட்ட முத்திரையை திறக்க வேண்டும். வினாத்தொகுப்பினை திறந்தவுடன் ஏதேனும் பக்கம்/ வினா இல்லாமல் இருக்கிறதா அல்லது பக்கங்கள் கிழிந்தோ சரியாக அச்சு பதிவு ஆகாமலோ இருக்கிறதா. ஒரே பக்கம் திரும்ப திரும்ப வருகிறதா என சரிபார்க்கவும் வினாத் தொகுப்பில், எங்கேயாவது ஏதேனும் குறை இருப்பினும், அதை அறை கண்காணிப்பாளரிடம் தெரிவித்து வினாத் தொகுப்பினை மாற்றிக் கொள்ள வேண்டும் தேர்வு முடிவதற்கான எச்சரிக்கை மணி 4.55 பி.ப-க்கும், இறுதி மணி 5.00 பி.ப. க்கும் அடிக்கும்.
    The Question Booklet will be issued to the candidates at 1.50 pm and the candidates must fill in all entries in Question Booklet and OMR Answer Sheet. Candidates should open the question booklet seal after a long bell at 2.00 pm. After opening the Question Booklet, ensure that any page/question is not missing/not printed/torn/ repeated. In case, you find any defect anywhere in the Question Booklet, immediately inform the Room Invigilator and get it replaced by him. Warning Bell will ring at 4.55 pm, and the last long bell will ring at 5.00 pm.
13. தேர்வு எண் OMR விடைத்தாள் எண், வினாத் தொகுப்பு எண். பெயர் மற்றும் கையொப்பம் போன்றவைகளை அதற்கேன வினாத் தொகுப்பு மற்றும் OMR விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் நிரப்ப வேண்டும்.
    Write your Roll No. OMR Answer Sheet No., Question Booklet Series, Name and put your signature in the space provided in the Question Booklet as well as in the OMR Answer Sheet.
14. ஒவ்வொரு வினாவிலும் A, B, C, D என்று குறிப்பிடப்பட்டுள்ள நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவையும், கவனமாக படித்து, உங்களுக்கு சரியானது என கருதும் விடையினை தேர்ந்தெடுக்கவும். OMR விடைத்தாளில் அவ்வினாவிற்கென தரப்பட்டுள்ள இடத்தில் சரியான வட்டத்தை நிழலிடுவதன் மூலம் உங்களது விடையை குறிப்பிடவும். நிழலிடுவதற்கென கருமைநிற பந்துமுனை பேனாவினா மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
    With each question, you will find four possible answers, marked by the letters A, B, C and D. Read each question carefully, and find out which answer, according to you is correct. Indicate your answer by darkening the appropriate circle completely in the OMR Answer Sheet corresponding to the question. For marking answer, use Black Ball Point pen only.
15. OMR விடைத்தாளானது கணினி மூலம் மதிப்பீடு செய்யப்படும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய குறிப்புகளை கடைபிடிக்காவிடில், கணினி மூலம் மதிப்பீடு செய்வது இயலாததாகிவிடும். இதனால் விண்ணப்பதாருக்கு ஏற்படும் இழப்புகளுக்கு விண்ணப்பதாரரே பொறுப்பாவார்.
    OMR Answer Sheet is designed for computer evaluation. If you do not follow instructions given above and shown in the OMR Answer Sheet, evaluation by computer will become difficult. Any resultant loss to the candidate on the above account, shall be of the candidate only.
16. இறுதி மணி ஒலிப்பதற்கு முன் எந்தவொரு விண்ணப்பதாரரும் தேர்வு அறையை விட்டு வெளியேறக் கூடாது. தேர்வு அறையை விட்டுச் செல்லும் முன்பு OMR விடைத்தாளை அறை கண்காணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் வினாத் தொகுப்பினை விண்ணப்பதாரரே எடுத்துச் செல்லலாம்.
    No candidate should leave the examination hall before the final bell. The OMR Answer Sheet should be handed over to the Room Invigilator before leaving the examination hall. The candidate is allowed to take the Question Booklet with him/her.

Professor Academy

# Part-A
# தமிழ் தகுதித் தேர்வு

***1.போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி 'வாரல்' என்பனபோல் மறித்துக்கை காட்ட" – இப்பாடலில் இடம் பெற்றுள்ள அணி ------------***
*அ.ஏகதேச உருவக அணி*
*ஆ.எடுத்துக்காட்டு உவமை அணி*
*இ.தற்குறிப்பேற்ற அணி*
*ஈ.நிரல் நிரை அணி*

***2.தன்மை அணியை……………….என்றும் கூறுவர்.***
*அ) தீவக அணி*
*ஆ) உவமை அணி*
*இ) தன்மை நவிற்சி அணி*
*ஈ) தற்குறிப்பேற்ற அணி*

***3.பிரெஞ்சு மொழியில் வந்த "காந்தி வாழ்க்கை வரலாற்றின்" தமிழாக்க நூல் எது?***
*அ) உண்மை சுடும்*
*ஆ) ஒரு கதாசிரியரின் கதை*
*இ) வாழ்விக்க வந்த காந்தி*
*ஈ) தேவன் வருவார்*

***4.வெண்பாவில் அமைந்த நூல்கள் …………***
*அ) குறள்; நாலடியார்*
*ஆ) நாலடியார்; மணிமேகலை*
*இ) குறள்; சிலம்பு*
*ஈ) குறள், வளையாபதி*

***5.ஒருவன் இருக்கிறான் கதை வெளியான இதழ் …………………***
*அ) கலைமகள்*
*ஆ) கணையாழி*
*இ) குமுதம்*
*ஈ) ஆனந்தவிகடன்*

***6.காலக் கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் ……….***
*அ) இகழ்ந்தால் என் மனம் இறந்து விடாது.*
*ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது.*
*இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என் மனம்.*
*ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்.*

***7.கண்ணதாசன் முதன் முதலில் திரைப்படத்திற்குப் பாடல் எழுதிய ஆண்டு…………………….***
*அ) 1939*
*ஆ) 1942*
*இ) 1949*
*ஈ) 1950*

***8.பொருத்துக.***
*1. கரையான் – அ) கட்டெறும்பு*
*2. காலக்கழுதை – ஆ) வந்தொட்டும்*
*3. தெருப்புழுதி – இ) காற்றுடைக்கும்*
*4. சட்ட ம் – ஈ) மண்வீடு கட்டும்*
*அ) 1.ஆ 2.அ 3.ஈ. 4.இ*
*ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ*
*இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ*
*ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ*

***9.மேன்மை தரும் அறம் என்பது……………..***
*அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது.*
*ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது.*
*இ) புகழ் கருதி அறம் செய்வது.*
*ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது*

***10.இரப்போர்க்கு ஈயாது வாழ்வதை விட உயிர் துறப்பது மேலானது' என்று கூறும்***
*அகநூல்…………………..*
*அ) கலித்தொகை*
*ஆ) குறுந்தொகை*
*இ) ஐங்குறுநூறு*
*ஈ) பரிபாடல்.*

***11.வள்ளலின் பொருள், இரவலனின் பொருள்' – என்றவர் ……………………***
*அ) நக்கீரர்*
*ஆ) கபிலர்*
*இ) பெரும்பதுமனார்*
*ஈ) நல்வேட்டனார்*

***12.சேர அரசர்களின் கொடைப் பதிவாக திகழும் நூல் ………………….***
*அ) புறநானூறு*
*ஆ) பரிபாடல்*
*இ) பதிற்றுப்பத்து*
*ஈ) சிலப்பதிகாரம்*

Professor Academy

**13.பொருத்துக.**
**அ) நக்கீரர் – 1. ஆடு கோட்பாட்டுச் சேரலாதன்**
**ஆ) ஔவையார் – 2. பெருஞ்சாத்தன்**
**இ) கபிலர் – 3. அதியன்**
**ஈ) நச்செள்ளையார் – 4. திருமுடிக்காரி**
அ) 4, 3, 2, 1
ஆ) 3, 2, 1, 4
இ) 2, 3, 4, 1
ஈ) 2, 4, 3, 1

**14.பொருத்துக.**
**1. செவிலித்தாய் – அ) பொருள் பொதிந்து கிடக்கின்றது.**
**2. புலவர் பாட்டு – ஆ) தெருவில் ஆடிப்பாடுபவர்.**
**3. இசைப்பாணர் – இ) பிறழ்ந்து செல்கின்றன.**
**4. குளத்து மீன்கள் – ஈ) சினங்காட்டுவார்.**
அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ
ஆ) 1.ஈ 2.அ 3.ஆ 4.இ
இ) 1.ஆ 2.அ 3.இ 4.ஈ
ஈ) 1.அ 2.இ 3.ஆ 4.ஈ

**15.படுகர் இனமக்களின் வாழ்வியல் மாற்றத்தைப் பேசும் புதினம் ………………………..**
அ) கரிப்புமணிகள்
ஆ) வேருக்குநீர்
இ) சேற்று மனிதர்கள்
ஈ) குறிஞ்சித்தேன்

**16.1954-ல் தாமரையணி விருது பெற்றவர் ………………………..**
அ) சின்னப்பிள்ளை
ஆ) பாலசரசுவதி
இ) எம்.எஸ். சுப்புலட்சுமி
ஈ) ராஜம் கிருஷ்ணன்

**17.‘கடுகி செல்’ – இதில் ‘கடுகி’ என்பதன் பொருள் …………………………..**
அ) செல்லுதல்
ஆ) மெதுவாக
இ) விரைந்து
ஈ) இயல்பாக

**18.“முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே”- என்று பாடியவர்**
அ) பெருஞ்சித்திரனார்
ஆ) க.சச்சிதானந்தன்
இ) வாணிதாசன்
ஈ) கண்ண தாசன்

**19.செந்தமிழ் – பிரித்து எழுதுக.**
அ) செந் + தமிழ்
ஆ) செம் + தமிழ்
இ) செ + தமிழ்
ஈ) செம்மை + தமிழ்

**20.பொருத்துக.**
**1. நடத்தல் – அ) எதிர்மறைத் தொழிற்பெயர்**
**2. கொல்லாமை – ஆ) வினையாலணையும் பெயர்**
**3. கேடு – இ) தொழிற்பெயர்**
**4. வந்தவர் – ஈ) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்**
அ) 1.ஆ 2.அ 3.ஈ 4.இ
ஆ) 1.இ 2.அ 3.ஈ. 4.ஆ
இ) 1.இ 2.ஆ 3.ஈ. 4.அ
ஈ) 1.இ 2.அ 3.ஆ 4.ஈ

**21.உறாஅர்க்கு, வரனசைஇ – அளபெடை வகை**
அ) சொல்லிசை, இன்னிசை
ஆ) ஒற்றளபெடை, சொல்லிசை
இ) செய்யுளிசை, சொல்லிசை
ஈ) இன்னிசை, சொல்லிசை

**22.தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது**
அ) தொழிற்பெயர்
ஆ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்
இ) முதனிலைத் தொழிற்பெயர்
ஈ) வினையாலணையும் பெயர்

**23.‘பெரிய மீசை’ சிரித்தார் – வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?**
அ) பண்புத்தொகை
ஆ) உவமைத்தொகை
இ) அன்மொழித்தொகை
ஈ) உம்மைத்தொகை

**24.கீழ்க்காணும் சொற்களில் உம்மைத்தொகை அல்லாத சொல் எது?**
அ) தேர்ப்பாகன்
ஆ) அண்ண ன் தம்பி
இ) வெற்றிலை பாக்கு
ஈ) இரவு பகல்

**25.பண்புத்தொகை அல்லாத ஒன்று**
அ) செங்காந்தள்
ஆ) வட்டத்தொட்டி
இ) இன்மொழி
ஈ) கொல்களிறு

Professor Academy

***26.காலம் கரந்த பெயரெச்சம்***

*அ) வினைத்தொகை*
*ஆ) பண்புத்தொகை*
*இ) உவமைத்தொகை*
*ஈ) உம்மைத்தொகை*

***27.கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?***

*அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்*
*ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்*
*இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்*
*ஈ) அங்கு வறுமை இல்லாததால்*

***28.ஓர் உயிர் பல உடல்களில் ஊடுருவி உலாவுவது போல பாயும் நதியாகப் பாலகாண்டத்தில் குறிப்பிடப்படுவது …………….***

*அ) சரயு* *ஆ) யமுனை*
*இ) பிரம்மபுத்திரா* *ஈ) கங்கை*

***29. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன் றுண்டாகச் செய்வான் வினை – இக்குறளில் பயின்று வரும் அணி.***

*அ) உவமையணி*
*ஆ) உருவக அணி*
*இ) வேற்றுமை அணி*
*ஈ) பிறிது மொழிதல் அணி*

***30. வடாமுயற்சி, சிறந்த அறிவாற்றல் இவ்விரண்டையும் இடைவிடாமல் பின்பற்றுபவரின் குடி………………***

*அ) உயர்ந்து விளங்கும்*
*ஆ) தாழ்ந்து நிற்கும்*
*இ) வாடிப் போகும்*
*ஈ) காணாமல் நீங்கும்*

---

Professor Academy

# Part-B

## தமிழ்

***31.“உண்டாலம்ம இவ்வுலகம்... தனக்கென முயலா நோன்தாள், பிறக்கென முயலுநர் உண்மையானே” என்ற அடிகளைப் பாடியவர் யார்?***
அ.காரிகிழார்
ஆ.கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி
இ.முரஞ்சியூர் முடிநாகராயர்
ஈ.ஐயூர் மூலங்கிழார்

***32.தசும்பு துளங்கு இருக்கை, ஏறா ஏணி, ஊன்துவை அடிசில் – என்பன யாவை?***
அ. பதிற்றுப்பத்துபாடல் தலைப்புகள்
ஆ. பட்டினப்பாலை சொற்கள்
இ. பாணாற்றுப்படை விருந்துச் சொற்கள
ஈ. புறநானூற்றுச் சொற்கள்

***33………………….. நாளில் மரங்களை வெட்டக் கூடாது என ஆசாரக் கோவை கூறுகிறது?***
அ.வெள்ளி ஆ.பிறந்தநாள்
இ.நிறைநிலா ஈ.மறைநிலா

***34. பட்டியல் ஒன்றைப் பட்டியல் இரண்டோடு பொருத்துக.***
பட்டியல் - *I* பட்டியல் - *II*
***A)*** தாயுமானவர் – ***I.***ஏறு மயில் ஏறி ஈசனுடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்று
***B)*** வள்ளலார் – ***II.***உற்றா... உறவு... பெற்றோர்... உளைப் பிரிந்தேன் பராபரமே
***C)*** அருணகிரிநாதர் - ***III.*** நெஞ்சமே கோவில்... பூசை கொள்ள வாராய் பராபரமே
***D)*** குணங்குடியார் - ***IV.*** ஆருயிர்க்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்
எவற்றுள் சரியானது?
அ. ***(A)-(III), (B)-(I), (C)-(IV), (D)-(II)***
ஆ. ***(A)-(IV), (B)-(III), (C)-(I), (D)-(I)***
இ. ***(A)-(III), (B)-(IV), (C)-(I), (D)-(II)***
ஈ. ***(A)-(IV), (B)-(II), (C)-(I), (D)-(III)***

***35.நெஞ்சாற்றுப்படுத்த நிறைதபு புலம்பொடு – எனும் அடி இடம்பெறும் நூல் எது?***
அ.முல்லைப்பாட்டு
ஆ.பட்டினப்பாலை
இ.நெடுநல்வாடை
ஈ.குறிஞ்சிப்பாட்டு

***36.கால்மூடும்படியாக அணியும் செருப்பை “அடிபுதை அரணம்” எனக் குறிப்பிடும் நூல் எது?***
அ.திருமுருகாற்றுப்படை
ஆ.கூத்தராற்றுப்ப்டை
இ.சிறுபாணாற்றுப்படை
ஈ.பெரும்பாணாற்றுப்படை

***37.குழவிகள் உற்ற …………… இன்னா.***
அ.பால் ஆ.வாய்
இ.பிணி ஈ.மால்

***38.முதுமொழிக் காஞ்சியின் ஆசிரியர் யார்?***
அ.பெருவாயில் முள்ளியார்
ஆ.கூடலூர்க்கிழார்
இ.முன்றுரை அரையனார்
ஈ.நல்லாதனார்

***39.நெடுநல்வாடையின் அடியளவு என்ன?***
அ.*103* ஆ.*188* இ.*317* ஈ.*500*

***40.வஞ்சி நெடும்பாட்டு என்று அழைக்கப்படும் நூல் எது?***
அ.நெடுநல்வாடை
ஆ.குறிஞ்சிப்பாட்டு
இ.பெரும்பாணாற்றுப்படை
ஈ.பட்டினப்பாலை

***41.பெரிய புராணம் தோன்ற மூலமாக அமைந்த நூல் எது?***
அ.திருத்தொண்டர் திருவந்தாதிஆ.திருத்தொண்டத்தொகை
இ.திருத்தொண்டர் வெண்பா
ஈ.திருத்தொண்டர் புராணம்

***42.கண்ணகியை அடைக்கலமாகப் பெற்றவர் யார்?***
அ.ஐயை ஆ.சுதமதி
இ.கவுந்தியடிகள் ஈ.மாதரி

***43.இரட்சணிய யாத்திரிகம் தொடராக வெளிவந்த இதழ் எது?***
அ.சன்மார்க்கம் ஆ.இறைமகன்
இ.நற்போதகம் ஈ.இறைதூதன்

Professor Academy

**44.மதுரை செல்லும்போது கோவலன், கண்ணகியுடன் சென்றவர் யார்?**
அ.அறவண அடிகள்
ஆ.வச்சணந்தி அடிகள்
இ.கவுந்தியடிகள்
ஈ.சுந்தர அடிகள்

**45.கதிரின் காதலன் என்று கம்பர் யாரைக் குறிப்பிடுகிறார்?**
அ.அங்கதன் ஆ.சுக்கிரீவன்
இ.அனுமன் ஈ.இராமன்

**46. பிரசார் பாரதி மசோதா**
அ.கல்வி, வேளாண்மை துறைகளில் மட்டும் கவனம் செலுத்தும்
ஆ.விருப்பு வெறுப்பின்றி நடுநிலைமையுடன் தகவல்களைத் தெரிவிப்பது
இ.தொழிலாளர்களின் நலனில் அக்கறைக் காட்டுவது
ஈ .ஒலிபரப்புத் தொழில்நுட்பங்களை மேம்படுத்துவது

அ.அ, ஆ, இ மட்டும் சரி
ஆ.ஆ, இ, ஈ மட்டும் சரி
இ.அ, இ, ஈ மட்டும் சரி
ஈ.அனைத்தும் சரி

**47.இராவண காவியத்தின் தடையை நீக்கியவர் யார்?**
அ.இராசாசி
ஆ.காமராசர்
இ.கலைஞர் கருணாநிதி
ஈ.அண்ணாத்துரை

**48. "பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்து இருப்பிலே யிருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை" – எனும் அடிகள் இடம்பெறும் நூல் எது?**
அ.வில்லிபாரதம்
ஆ.கம்பராமாயணம்
இ.திருவிளையாடற்புராணம்
ஈ.நளவெண்பா

**49.கலி நீங்கு காண்டம் இடம்பெறும் நூல் எது?**
அ.வில்லிபாரதம்
ஆ.கம்பராமாயணம்
இ.திருவிளையாடற்புராணம்
ஈ.நளவெண்பா

**50.கவியரசு கண்ணதாசனின் இறுதிப்படைப்பு எது?**
அ.சேரமான் காதலி
ஆ.ஆட்டனத்தி ஆதிமந்தி
இ.வனவாசம்
ஈ.இயேசுகாவியம்

**51.நம்மாழ்வாரையே தெய்வமாகக் கருதிப் பாசுரங்களைப் பாடியவர் யார்?**
அ.திருப்பாணாழ்வார்
ஆ.திருமழிசையாழ்வார்
இ.மதுரகவியாழ்வார்
ஈ.பெரியாழ்வார்

**52.ஆதி உலா, பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை ஆகிய நூல்களைப் பாடியவர் யார்?**
அ.நக்கீரர்
ஆ.சேரமான் பெருமான்
இ.திருவாலவாயுடையார்
ஈ.கல்லாடர்

**53.உழவுத்தொழில் செய்யும் மக்களின் வாழ்வியலைக் கூறும் நூல் எது?**
அ.சதகம் ஆ.பரணி
இ.அந்தாதி ஈ.பள்ளு

**54.அரசு கணக்கராகப் பணியாற்றியவர் யார்?**
அ.அருணகிரிநாதர் ஆ.பட்டினத்தார்
இ.தாயுமனவர் ஈ.வள்ளலார்

**55.செருப்பு விடு தூது எனும் நூலை இயற்றியவர் யார்?**
அ. பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர்
ஆ.ஔவை சு.துரைசாமிப்பிள்ளை
இ.சி.வை.தாமோதரம் பிள்ளை
ஈ.பண்டிதமணி மு.கதிரேசனார்

**56.நன்னூலுக்கு "புத்தம் புத்துரை" எழுதியவர் யார்?**
அ.சிவஞான முனிவர்
ஆ.மயிலைநாதர்
இ.ஆண்டிப்புலவர்
ஈ.நாதமுனிவர்

**57.தமிழ்ப் பதிப்புத் துறையின் முன்னோடி என்று அழைக்கப்படுபவர் யார்?**
அ.அவ்வை சு.துரைசாமிப் பிள்ளை
ஆ.சி.வை.தாமோதரம் பிள்ளை
இ.பொ.வே.சோமசுந்தரனார்
ஈ.வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியார்

Professor Academy

**58.திருவேங்கடக்கலம்பகம், அழகர் கலம்பகம், மதுரைக் கலம்பகம், முதுமொழிக்காஞ்சி ஆகிய நூல்களுக்கு உரை எழுதியவர் யார்?**
அ.அவ்வை சு.துரைசாமிப் பிள்ளை
ஆ.சி.வை.தாமோதரன்பிள்ளை
இ.பொ.வே.சோமசுந்தரனார்
ஈ.வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியார்

**59.வீரநாராயணபுரம் என்னும் ஊரில் பிறந்தவர் யார்?**
அ.சிவஞான முனிவர் ஆ.மயிலைநாதர்
இ.ஆண்டிப்புலவர் ஈ.நாதமுனிவர்

**60.மேலப்பெருமழை என்னும் ஊரில் பிறந்தவர் யார்?**
அ.அவ்வை சு.துரைசாமிப் பிள்ளை
ஆ.சி.வை.தாமோதரன்பிள்ளை
இ.பொ.வே.சோமசுந்தரனார்
ஈ.வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியார்

**61.விடுதலை பெற்ற தமிழ்நாட்டின் முதல் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தவர் யார்?**
அ.கண்ணதாசன்
ஆ.புலமைப்பித்தன்
இ.நாமக்கல் கவிஞர்
ஈ.வைரமுத்து

**62..ஊர்வலம் என்ற இதழை நடத்தியவர் யார்?**
அ.மு.மேத்தா ஆ.சுரதா
இ.தமிழ்ஒளி ஈ.பாபநாசம் சிவன்

**63.“மனுசனை மனுசன் சாப்பிடறாண்டா தம்பிப்பயலே” எனும் பாடலைப் பாடியவர் யார்?**
அ.மருதகாசி
ஆ.பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
இ.வாலி
ஈ.உடுமலை நாராயணகவி

**64.இருமுறை சாகித்திய அகாதெமி விருது பெற்ற படைப்பாளர் யார்?**
அ.கண்ணதாசன் ஆ.பாரதிதாசன்
இ.சிற்பி ஈ.அப்துல்ரகுமான்

65.'**ஆஸ்திரேலியாவில் வாழும் இலங்கை புலம்பெயர் தமிழர்களின் ஆங்கில படைப்பிலக்கிய வெளிப்பாடுகள்**' என்னும் **தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர் யார்?**
அ.கனிமொழி
ஆ.சல்மா
இ.சுகிர்தராணி
ஈ.தமிழச்சி தங்கபாண்டியன்

**66.சி.எஸ்.லட்சுமி என்ற இயற்பெயர் கொண்டவர் யார்?**
அ.இளம்பிறை ஆ.அம்பை
இ.வைகைச்செல்வி ஈ.புதியமாதவி

67. பட்டினத்தார் இயற்றிய நூல்களைத் தேர்க.
A) கோயில் நான்மணிமாலை
B) திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது
C) திருஏகம்பமுடையார் திருவந்தாதி
D) வைத்தியநாதசுவாமி பிள்ளைத்தமிழ்
சரியானதைத் தேர்க:
அ.A,B, D மட்டும் சரி
ஆ.A,B, C மட்டும் சரி
இ.A,C, D மட்டும் சரி
ஈ.அனைத்தும் சரி

**68.தனது வீட்டில் காகங்கள் என்ற இலக்கிய அமைப்பை ஏற்படுத்தி தொடர்ந்து நடத்தி வந்தவர் யார்?**
அ.தி.ஜானகிராமன் ஆ.சா.கந்தசாமி
இ.ஜெயகாந்தன் ஈ.சுந்தரராமசாமி

**69.அசுரன் என்ற திரைப்படம் யாருடைய படைப்பின் அடிப்படையில் படமாக்கப்பட்டது?**
அ.ஜெயகாந்தன்
ஆ.பூமணி
இ.கி.ராஜநாராயணன்
ஈ.கு.ப.ராஜகோபாலன்

**70.சூல் எனும் நாவலுக்காக சாகித்திய அகாதமி விருது பெற்றவர் யார்?**
அ.டி.செல்வராஜ் ஆ.ஜோ.டி.குரூஸ்
இ.பூமணி ஈ.சோ.தர்மன்

**71.தமிழ்நாடகத் தலைமையாசிரியர் என்றழைக்கப்படுபவர் யார்?**
அ. பம்மல் சம்பந்த முதலியார்
ஆ.சங்கரதாஸ் சுவாமிகள்
இ.ஆர்.எஸ்.மனோகர்
ஈ.பி.எஸ்.ராமையா

**72.ஹால்டி காட்டி விருது பெற்ற படைப்பாளர் யார்?**
அ.சோ.ராமசாமி
ஆ.அறிஞர் அண்ணா
இ.ஆர்.எஸ்.மனோகர்

Professor Academy

ஈ.பி.எஸ்.ராமையா

**73. கலைஞர் கருணாநிதி எழுதிய நாடகங்களில் வணிகரீதியாக பெருவெற்றி அடைந்த நாடகம் எது?**
அ.தூக்குமேடை ஆ.சாக்கிரட்டீஸ்
இ.நச்சுக்கோப்பை ஈ.மந்திரகுமாரி

**74. அறிஞர் அண்ணாவின் முதல் நாடகம் எது?**
அ.ரோம் எரிகிறது
ஆ.நீதிதேவன் மயக்கம்
இ.சந்திரோதயம்
ஈ.சொர்க்கவாசல்

**75. கருஞ்சுழி என்ற நாடகத்தின் ஆசிரியர் யார்?**
அ.இரா.ராசு ஆ.சே.இராமானுசம்
இ.முருகபூபதி ஈ.வ.ஆறுமுகம்

**76. புதுமைப்பித்தனின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் யார்?**
அ.வ.ரா
ஆ.தொ.மு.சி.ரகுநாதன்
இ.பொன்னீலன்
ஈ.சிற்பி

**77. தன் பயண இலக்கிய நூலான அக்கரைச்சீமையில் நூலுக்காக சாகித்ய அக்காதமி விருது பெற்றவர் யார்?**
அ.ஏ.கே.செட்டியார்
ஆ.சோமலே
இ. மணியன்
ஈ.மீ.ப.சோமு

**78. திருவொற்றி முருகர் மும்மணிக்கோவையைப் பாடியவர் யார்?**
அ.மறைமலையடிகள்
ஆ.வ.சுப.மாணிக்கம்
இ.பாரதியார்
ஈ.குமரகுருபரர்

**79. தமிழில் அறிவியல் படைப்பிலக்கியம் என்ற நூலின் ஆசிரியர் யார்?**
அ.வே.ஸ்ரீராம்
ஆ.மணவை முஸ்தபா
இ.குளச்சல் யூசூப்
ஈ.சா.தேவதாஸ்

**80. குறுந்தொகை மொழியாக்கத்திற்காக "நல்லி திசை எட்டும் மொழியாக்க விருது" பெற்றவர் யார்?**
அ.ஏ.கே.இராமானுஜன்
ஆ.கா.செல்லப்பன்
இ.அ.தட்சிணாமூர்த்தி
ஈ.க.வாசுதேவன்

**81. 'எழுத்தெனப்படுவ அகரமுதல னகரவிறுவாய்' எனத் தமது நூலைத் தொடங்கியவர்?**
அ.நன்னூலார்
ஆ.பனம்பாரனார்
இ.தொல்காப்பியனார்
ஈ.வைத்தியநாத தேசிகர்

**82. மருட்பா பாடல் எதில் தொடங்கி எதில் முடியும்?**
அ.கலிப்பாவில் தொடங்கி வெண்பாவில் முடியும்
ஆ.ஆசிரியப்பாவில் தொடங்கி வெண்பாவில் முடியும்
இ.வெண்பாவில் தொடங்கி மருட்பாவில் முடியும்
ஈ.வெண்பாவில் தொடங்கி ஆசிரியப்பாவில் முடியும்

**83. கைக்கிளையின் பாகுபாடுகள் எத்தனை?**
அ.6 ஆ.4 இ.5 ஈ.3

**84. இரங்கலை உரிப்பொருளாகக் கொண்ட அகத்திணை எது?**
அ.நெய்தல் ஆ.பாலை
இ.குறிஞ்சி ஈ.முல்லை

**85. அணி இலக்கணம் கூறாத நூல் எது?**
அ.சந்திராலோகம்
ஆ.மாறனலங்காரம்
இ.குவலயானந்தம்
ஈ.யாப்பதிகாரம்

**86. தொண்டை நாட்டுப் புளியங்குடியில் பிறந்த இலக்கண நூல் ஆசிரியர்?**
அ.சுவாமிநாத தேசிகர்
ஆ.பவணந்தி முனிவர்
இ.ஐயனாரிதனார்
ஈ.நாற்கவிராச நம்பி

**87. சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தைக் கூறாத பாட்டியல் நூல் எது?**
அ.பன்னிரு பாட்டியல்
ஆ.வெண்பாப் பாட்டியல்
இ.வரையறுத்த பாட்டியல்
ஈ.நவநீதப்பாட்டியல்

Professor Academy

***88.சென்னை அரசியலார் ஓலைச்சுவடி நூலகத்தில் எந்நூலின் கையெழுத்துப்பிரதி அமைந்துள்ளது?***
அ.பிரபந்த தீபிகை
ஆ.சிதம்பரப் பாட்டியல்
இ.நவநீதப்பாட்டியல்
ஈ.பிரபந்த தீபிகை

***89.ஆநிரை மீட்டல் என்பது …………………….. திணை.***
அ.வெட்சி ஆ.கரந்தை
இ.வஞ்சி ஈ.காஞ்சி

***90.காரும் மாலையும் ………………….***
அ.குறிஞ்சி ஆ.முல்லை
இ.மருதம் ஈ.நெய்தல்

***91. "அவர் காலத்தில் அவரைப் போன்ற பெருமை உடைய ஆசிரியர் இல்லாததால் தான், அவருக்குப் பேராசிரியர் என்ற சிறப்புப் பெயர் வழங்கியது" என்று கூறுபவர் யார்?***
அ.எஸ்.வையாரிபுரிப்பிள்ளை
ஆ.தெ.பொ.மீ
இ.வி.செல்வநாயகம்
ஈ.ச.அகத்தியலிங்கம்

***92.கூற்று 1: சங்கம் மருவிய காலத்தில் தோன்றியவை பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்.***
***கூற்று 2: இந்நூல் வரிசையால் முப்பால் என்ற பெயரால் திருக்குறள் குறிக்கப்படுகிறது.***
*1. கூற்று 1 சரி, கூற்று 2 தவறு*
*2.கூற்று 1 தவறு, கூற்று 2 சரி*
*3.கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி*
*4.கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு*

***93.சென்னையில் கல்வி விளக்க அச்சகம் என்ற அச்சகத்தை அமைத்து நடத்தி வந்தவர் யார்?***
அ.சங்கர நமச்சிவாயர்
ஆ.வெள்ளைவாரணர்
இ.விசாகப்பெருமாளையர்
ஈ.ஆண்டிப்புலவர்

***94.தில்லை நடராசப் பெருமான் திருக்கோயிலில் திருமுறைகளை நடராசப் பெருமான் சன்னதியிலேயே ஓதவேண்டும் என்று வ.சுப. மாணிக்கனாருடன் போராட்டத்தில் ஈடுபட்டவர் யார்?***
அ.சங்கர நமச்சிவாயர்
ஆ.வெள்ளைவாரணர்
இ.விசாகப்பெருமாளையர்
ஈ.ஆண்டிப்புலவர்

***95.பேரூர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார், முனைவர் வை.இரத்தினசபாபதி, முனைவர் த.பெரியாண்டவன், தெ.முருகசாமி உள்ளிட்ட அறிஞர்களுக்கு ஆசிரியராய் அமைந்தவர் யார்?***
அ.சங்கர நமச்சிவாயர்
ஆ.செ.வை.சண்முகம்
இ.விசாகப்பெருமாளையர்
ஈ.ஆ.சிவலிங்கனார்

***96.பன்மொழிப்புலவர் என்று அழைக்கப்படுபவர் யார்?***
அ.ச.அகத்தியலிங்கம்
ஆ.பொற்கோ
இ.செ.வை.சண்முகம்
ஈ.தெ.பொ.மீனாட்சிசுந்தரம்

***97.மொழிசார்ந்த சுயமரியாதை என்ற நூலின் ஆசிரியர் யார்?***
அ.ச.அகத்தியலிங்கம்
ஆ.பொற்கோ
இ.முத்துச்சண்முகன்
ஈ.கு.பரமசிவன்

***98.உலக அளவில் பல்வேறு பல்கலைக்கழகங்கள் தமிழ் அமைப்புகள் மொழியியல் அமைப்புகளில் பொறுப்பு வகித்த பெருமைக்கு உரியவர் யார்?***
அ.ச.அகத்தியலிங்கம்
ஆ.பொற்கோ
இ.முத்துச்சண்முகன்
ஈ.கு.பரமசிவன்

***99.இக்கால மொழியியல் எனும் நூலின் ஆசிரியர் யார்?***
அ. ச.அகத்தியலிங்கம் ஆ.பொற்கோ
இ.முத்துச்சண்முகன் ஈ.கு.பரமசிவன்

***100.பின்வருபவர்களுள் இரு நிகண்டுகளை இயற்றியவர் யார்?***
அ.பிங்கலர்
ஆ.அருமருந்தைய தேசிகர்
இ.ஆண்டிப்புலவர்
ஈ.ஈசுரபாரதியார்

***101.திறனாய்வுக்கு இணையான ஆங்கிலச் சொல்லான 'கிரிட்டிசம்' என்பதை கலைச் சொல்லாக முதன் முதலில் பயன்படுத்தியவர் யார்?***

Professor Academy

அ.ஆலன் ஆம்போ ஆ.ஜான் டிரைடன்
இ.பிரான்சிஸ் பேக்கன் ஈ.எட்வின்

***102. பெரியபுராணத்தில் பயின்று வந்துள்ள பாடலடிகள் எவை?***
*A. பெருமையால் தம்மை ஒப்பார்*
*B. அன்பினால் இன்பம் ஆர்வார்*
*C. ஒருமையால் உலகை வெல்வார்*
*D. சிந்தனை உனக்குத் தந்தேன்*
*எவற்றுள் சரியானது?*
*அ.A, B, C மட்டும்*
*ஆ.A, B, D மட்டும்*
*இ.A, C, D மட்டும்*
*ஈ.B, C, D மட்டும்*

***103.'விமர்சனம்' என்ற தமிழ்ச் சொல்லுக்குத் 'திறனாய்வு' என்ற சொல்லை வழக்கத்தில் கொண்டு வந்தவர் யார்?***
அ. முத்து சிவன் ஆ.அ.ச.ஞானசம்பந்தம்
இ.கைலாசபதி ஈ.வானமாமலை

***104.திறனாய்வாளன் முதலில்_____***
அ.திறனாய்வாளன் ஆ.நூலாசிரியர்
இ.வாசகன் ஈ.பயிற்சியாளர்

***105."தமிழே நீ ஒரு பூக்காடு, நான் ஒரு தும்பி" என்று பாடியவர் யார்?***
அ.பாரதியார் ஆ.திரு.வி.க
இ.நாமக்கல் கவிஞர் ஈ.பாரதிதாசன்

***106.திறனாய்வாளனிடம் நிச்சயம் இருக்க வேண்டிய பண்பு எது?***
அ.நன்றாக படித்தல்
ஆ.நன்றாக எழுதுதல்
இ.நடுவுநிலைமை
ஈ.தெளிவாகக் கேட்டல்

***107.'இலக்கியம் என்பது வாழ்க்கையின் விமர்சனமே' என்று கூறியவர் யார்?***
அ.ஆலன் ஆம்போ
ஆ.ஜான் டிரைடன்
இ.பிரான்சிஸ் பேக்கன்
ஈ.மாத்யூ அர்னால்டு

***108.கான்ஸ்டன்ட் பெடின் என்ற அறிஞர் எந்த நாட்டைச் சார்ந்தவர்?***
அ. அமெரிக்கா ஆ.தென்னாப்பிரிக்கா
இ.இங்கிலாந்து ஈ.ரஷ்யா

***109.இலக்கிய பின்மொழிதல் திறனுக்கு அடிப்படை இழையாக இருப்பது ................***
அ. காலம் ஆ.இடம்
இ.சொல் ஈ.எழுத்து

***110.கவிதையில் தனித்தன்மை பெறுவது எது?***
அ. எழுத்து ஆ.வாக்கியம்
இ.சொல் ஈ.பொருள்

***111.ஹரப்பா எழுத்துகளுக்கும் தமிழ் எழுத்துகளுக்கும் தொடர்பு உண்டு என்று கூறியவர் யார்?***
அ.சர்ஜான் மார்ஷல்
ஆ.ஹீராஸ் பாதிரியார்
இ.ஐராவதம் மகாதேவன்
ஈ.இரா.நாகசாமி

***112.புதுச்சேரியை “பொதுகை” என அழைத்தவர்கள் யாவர்?***
அ.கிரேக்கர்கள் ஆ.சீனர்கள்
இ.யவனர்கள் ஈ.ரோமானியர்கள்

***113.அரசர்களும் அவர்தம் பணியாளர்களும் அணியும் சட்டைக்கு என்ன பெயர்?***
அ.படப்பை ஆ.படம்
இ.கலிங்கம் ஈ.கஞ்சுகம்

***114.முதலாம் நரசிம்மவர்மனிடம் படைத்தளபதியாகப் பணியாற்றிய பரஞ்சோதி என்பவர் யார்?***
அ.அரிவாட்ட நாயனார்
ஆ.கண்ணப்பர்
இ.புகழ்ச்சோழர்
ஈ.சிறுத்தொண்டர்

***115.சோழ நாட்டைச் “சூளியே” என்று குறிப்பிடுபவர் யார்?***
அ.யுவான்சுவாங் ஆ.சர்ஜான் மார்ஷல்
இ.ஜி.யு.போப் ஈ.கால்டுவெல்

***116.இரண்டாம் இராசேந்திரன் மூத்த மகன் யார்?***
அ.முதலாம் இராசாதிராசன்
ஆ.இராசமகேந்திரன்
இ.வீர ராசேந்திரன்
ஈ.அதிராசேந்திரன்

***117.சமையற்கலையை விளக்கும் நூல் எது?***
அ.கூப நூல் ஆ.சித்திர நூல்
இ.மடை நூல் ஈ.செந்நூல்

***118.மராட்டியர்கள் முதன்முதலில் தமிழகத்தின் எந்த ஊருக்குள் நுழைந்தனர்?***

Professor Academy

அ.மதுரை ஆ.சேலம்
இ.கன்னியாகுமரி ஈ.தஞ்சாவூர்

***119.வேலூரில் சிப்பாய்க்கலகம் நடைபெற்ற ஆண்டு எது?***
அ.1807
ஆ.1806
இ.1805
ஈ.1804

***120.தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தைக் கொண்டு வந்தவர் யார்?***
அ.காமராசர்
ஆ.பக்தவத்சலம்
இ.அண்ணாத்துரை
ஈ.கலைஞர் கருணாநிதி

***121.மார்க்கோனி இயற்பியலுக்கான நோபல் பரிசைப் பெற்ற ஆண்டு?***
அ.1907 ஆ.1905
இ.1903 ஈ.1909

***122.தமிழ்நாட்டில் முதல் பண்பலை நிலையம் தொடங்கப்பட்ட இடம் எது?***
அ.திருச்சி ஆ.கோவை
இ.சென்னை ஈ.மதுரை

***123.பேஸ்புக் நிறுவனத்தின் இணை-நிறுவனர் யார்?***
அ. ஜேர் டோர்சே
ஆ.ஜேன்.கோம்
இ.மைக் கிரிக்கர்
ஈ.ஜூக்கர் பெர்க்

***124."கசியும் மௌனம்" என்னும் வலைப்பூவை அறிமுகம் செய்தவர் யார்?***
அ.குணசீலன் ஆ.ஜெயந்தி
இ.குப்புசாமி ஈ.ஈரோடு கதிர்

***125.குழந்தைக்குக் காது குத்துதல் என்பது எந்தச் சடங்குள் ஒன்றாக அமையும்?***
அ. பூப்புச் சடங்கு
ஆ.பிறப்புச் சடங்கு
இ.திருமணச் சடங்கு
ஈ.இறப்புச் சடங்கு

***126.நாட்டுப்புறச் சடங்குகளில் ஒன்றான மழைச்சடங்கை முதன் முதலில் கூறும் நூல் எது?***
அ.மணிமேகலை ஆ.சிலப்பதிகாரம்
இ.வளையாபதி ஈ.சீவக சிந்தாமணி

***127.கரிசல் வட்டாரத்தில் வழங்கிய நாட்டுப்புறக் கதைகளை இலக்கிய வடிவில் எளிய நடையில் படைத்தவர் யார்?***
அ.முனைவர்.சு.சக்திவேல்
ஆ.தெ.பொ.மீனாட்சிசுந்தரம்
இ.கி.ராஜநாராயணன்
ஈ.மு.வரதராசனார்

***128.'மயில் ராவணன் கதை' என்ற பெயரில் முதன் முதலாகத் தமிழில் நாட்டுப்புறக் கதையை வெளியிட்டவர் யார்?***
அ.தெ.பொ.மீனாட்சிசுந்தரம்
ஆ.வீராச்சாமி நாயக்கர்
இ.முத்துசிவன்
ஈ.நா.வானமாமலை

***129.கண்ணகிக்குக் கோயில் உள்ள ஊர்?***
அ.திருவாதவூர்
ஆ.திருக்கோவிலூர்
இ.திருவானைக்காவல்
ஈ.வண்ணாத்திப்பாறை

***130.சூடு பவளங்கள் கிடைத்த இடம் எது?***
அ.சிவகளை
ஆ.கொடுமணல்
இ.வெள்ளலூர்
ஈ.பையம்பள்ளி

Professor Academy

Professor Academy